டாலுக்ஸ்'' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நான் குறிப்பிட்ட செயற்குறிப்பின்மீது சர்க்கார் விரைவிலே முடிவெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அப்படிப் திருத்தப்பட்டு, ஆங்கிலத்திலும் தமிழிலும் அடுத்த சட்டமன்ற கூட்டத்தில் தனியாக ஒரு கேள்வி உறுப்பினர் கேட்டால் அதற்குப் பதில் அளிக்கப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி.

*532 வினு—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி ஒன்று அமைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இம்மாநிலத்தில் புதியதொரு வேளாண்மைக் கல்லூரியைத் தொடங்குவது, அதனை எங்கு அமைப்பது என்பதுபற்றிய செயற்குறிப்பு ஒன்றை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகின்றது.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தொழில் துறையில் மட்டுமே சிறந்து விளங்கும் வட்டத்தில் விவசாயக் கல்லூரி இருக்கும் போது தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கக்கூடிய ஆடுதுறையில் ஒரு விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா? அதைத் தற்போது இல்லாவிட்டால் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தஞ்சை நெற்களஞ்சியம் மாத்திரம் அல்ல, தஞ்சையிலே நெல் ஆராய்ச்சி நிலையமும் இருக்கிறது. மண் ஆராய்ச்சி நிலையமும் ஆடுதுறையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இதிலே இருக்கிற முக்கியமான பிரச்னை ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பிக்கவேண்டுமானல் குறைந்தபட்சம் 2 கோடி ரூபாய் செலவாகும். அதில் பொது மக்கள் பங்காக 25 இலட்சம் ரூபாயும் அந்த கல்லூரிக்குத் தேவையாகக் கிட்டத்தட்ட குறைந்தபட்சம் 400 ஏக்கர் நிலமும் வேண்டும். பொதுமக்கள் சார்பிலே அவர்கள் பங்காக 400 ஏக்கர் நிலமும் 25 இலட்சம் ரூபாயும்—தஞ்சை மாவட்டத்திலே நிறைய செல்வந்தர்கள் நிலவுகிற காரணத்தினுல்—அங்கே கொடுப்பார்களானல் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் போகவேண்டிய அவசியம் கிடையாது. அடுத்த ஆண்டிலேயே துவக்கக்கூடிய சூழ்நிலை உருவாகலாம்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : தலைவர் அவர்களே, நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில், அதுவும் கீழைத் தஞ்சை மாவட்டத்தில் இருக்கக் கூடிய திருவாரூர் நகரத்தில் இந்த விவசாயக் கல்லூரியை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கீழைத் தஞ்சையில் மட்டும் அல்ல, மேற்கு தஞ்சையிலும் அந்தக் கோரிக்கை இருக்கிறது. திருவாரூர் என்று குறிப்பிட்டதனாலே அதற்கு முதல் சலுகை கிடைக்கும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள். ஆனல், அப்படிப்பட்ட நிலைமை அல்ல. நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, 25 இலட்சம் ரூபாயும் 400 ஏக்கர் நிலமும் திருவாரூரில் இருக்கிற செல்வந்தர்கள் கொடுத்தாலும் அங்கேயும் அதைக் கொடுப்பதற்கு யோசிக்கலாம்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், தூத்துக்குடியில் இருக்கிற ஒரு வியாபாரப் பிரமுகர் ஏராள மான பணமும், நிலமும் நன்கொடையாகத் தர முன்வந்ததாகத்தகவல் வெளிவந்தது. அப்படி அவர் தர விரும்பினுல் இந்த விவசாயக் கல்லூரியைத் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைக்கின்ற உத்தேசம் அமைச்சர் அவர்களுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

1969 மார்ச் 31]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தூத்துக்குடியில் ஆர். ஆர். ஆறுமுகசாமி நாடார் என்பவர் 17 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலத்தை விவசாயக் கல்லூரிக்கு வழங்குவதற்குத் தாயராக இருப்பதாக மாவட்டக் கலெக்டர் மூலமாகத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தொகை போதாத காரணத்தால்தான் இதைச் செய்ய முடியாது. 17 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலம் தருகிறேன், "ஆறுமுகசாமி நாடார் கல்லூரி" என்று பெயர் வைத்தால் போதும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் கூடுதலாகக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை வந்தால் அதைப்பற்றி யோசிக்கலாம். பட்டா நிலத்தைத்தான் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று அல்ல, புறம்போக்கு நிலத்தைச் சதுரமாகக் காண்பித்தால்கூட ஏற்றுக்கொள்ளலாம்.

மதுரை கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்.

*** 533 வினு—திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு உணவு—வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை சாத்தமங்கலம் பால் திட்டத்தோடு மதுரை கூட்டுறவு பால் யூனியனையும் நடத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், யூனியனில் வேலை பார்க்கும் சிப்பந்திகளையும் பால் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும் உத்தரவு ஏதேனும் அனுப்பியதுண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) : மதுரை நகரில் பால் வாங்குபவர்களுக்குப் பால் வழங்குவதற்காக மதுரை பால் பாதுகாப்புப் பண்ணை ஒன்றை ஏற்படுத்தியதன் விளைவாக, மதுரை கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் பால் வழங்கும் பணியைக் கைவிட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டது. இந்தச் சங்கம் சேகரிக்கும் பாலை மதுரை பால் பாதுகாப்புப் பண்ணையிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்றும், பாதுகாப்பு நிலையத்திடம் ஒப்படைப்பதற்காகப் பாலை உற்பத்தி செய்வதையும் சேகரிப்பதையுமே இது மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசாங்கம் ஆணையிட்டது. அதற்கிணங்கக் கூட்டுறவுச் சங்கம் பால் வழங்கும் பணியைக் கைவிட்டது. இதற்கெனச் சங்கம் நியமித்திருந்த பணியாளர்களை ஆட்குறைப்புச் செய்ய வேண்டியதாயிற்று. சங்கம் ஆட்குறைப்புச் செய்த 54 பணியாளர்களில் 46 பேர் மதுரை பால்பண்ணையிலேயே வேலைக்கு வைத்துக் கொள்ளப்பட்டனர். சங்கத்தின் எழுத்தர் பணியாளர்களாகிய எட்டுப் பேருக்கும் மதுரை பால் பண்ணையில் வேலைக்கு எடுத்துக் கொள்வதற்குத் தேவையான தகுதியிராததால், அவர்களைப் பணியிலமர்த்திக் கொள்ளவில்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : சாத்தமங்கலம் பால் திட்டத்தோடு மதுரை கூட்டுறவுப் பால் பண்ணை இணைக்கப்பட்ட பிறகு வேலையிலிருந்து நீக்கப்பட்ட எட்டுப் பேர்களுக்கும்—அவர்கள் வேலை இல்லாது மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால்—மீண்டும் பரிசீலனைசெய்து சாத்தமங்கலம் பால் திட்டத்திலேயே ஏதேனும் வேலை கொடுத்துப் பாதுகாக்க அரசு முன்வருமா எனக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வேலையிலிருந்து நீக்கப்பட்ட எட்டுப் பேர்களும், போதுமான தகுதி (குவாலிஃபிகேஷன்) இல்லாத காரணத்தினுல் தான் நீக்கப்பட்டார்கள். அவர்களுடைய படிப்புக்குத் தகுந்த வேலை வேண்டுமென்றால் அரசாங்கம் யோசிக்கும்.

Town Planning Officers.

*** 534 *Q.*—THIRU S. RAMACHANDRAN :** Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state the stage at which the proposal of provincialisation of the services of Municipal Town Planning Officers stands ?